# கரூர் மாநகராட்சி

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் தேதி வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும்.

## <u>பொருள்கள்</u>

**1)** அரசாணை (எம்.எஸ்.) எண்.20 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.01.2022ல் உட்கட்டமைப்பு மற்றும அடிப்படை வசதிகள் திட்டம் (I&A) 2021–2022 ம் ஆண்டு திட்டத்தின்கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.62.50கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு முதல் கட்டமாக ரூ.4000.00லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.001/2022/டிஒ1 நாள்.30.06.2022 தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 03.08.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4000.00 லட்சம்</u>**

1. M/s.Sri Pathy Associates, Private Ltd., Erode., மதிப்பீட்டைவிட 3.05% சதம் அதிகம்
2. M/s.Sankaranand Infra, Karur மதிப்பீட்டைவிட 4.13% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. உட்கட்டமைப்பு மற்றும அடிப்படை வசதிகள் திட்டம் (I&A) 2021–2022 ம் ஆண்டு திட்டத்தின்கீழ் கரூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட திருமாநிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.62.50கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Pathy Associates, Private Ltd., Erode என்பவர் மதிப்பீட்டினைவிட கூடுதலான சதவிகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தினை குறைத்து தரக்கோரி விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலக கடித ந.க.எண்.இ1/8560/2021, நாள்.12.08.2022ன் மூலம் கோரியதில், ஒப்பந்ததாரர் 13.08.2022ம் தேதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து கொடுத்துள்ளார்.

   1. M/s.Sri Pathy Associates, Private Ltd., Erode., மதிப்பீட்டைவிட 2.95% சதம் அதிகம்
   2. M/s.Sankaranand Infra, Karur மதிப்பீட்டைவிட 4.13% சதம் அதிகம்

   மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% சதவிகித தொகைக்குள் மாமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் M/s.Sri Pathy Associates, Private Ltd., Erode., என்பவர் 2.95% சதவிகித கூடுதல் தொகையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினை செய்து முடிக்கவும், அதற்கான உத்தரவு வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மதிப்பீட்டுத் தொகையினைவிட கூடுதலாகும் செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். **(இ1/8560/2021)**

**தீர்மான எண்.445**அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி